## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை - 2013

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 11 ஆம் இலக்க அரச விவசாய கூட்டுத்தாபனங்கள் அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களிற்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டில் இனங்காணப்பட்டிருந்த ரூபா 12,379,621 தொகையான இருப்புக் குறைவினை கணக்கிணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது வியாபார இருப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய மிகை பெறுமானத்தேய்வுச் சீராக்கம் ரூபா 16,481,659 தொகை முன்னைய ஆண்டுச் சீராக்கமாக சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் திரண்ட நிதியத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் படி 12 குத்தகை வாகனங்களிற்காக செலுத்திய மொத்தத் தொகை ரூபா 11,940,280 ஆக காணப்பட்ட போதிலும், உறுதிப்படுத்தல்களின் படி செலுத்திய மொத்தத் தொகை ரூபா 12,249,492 ஆக காணப்பட்டமையால் ரூபா 309,212 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இவ்வேறுபாட்டினை இனங்கண்டு தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கில்லை.

### 2.3 பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சோளம் பயிர்ச்செய்கை செயற்திட்டம் தொடர்பாக 2009 ஆம் ஆண்டு முதல் கந்தளாய் இலங்கை வங்கி கிளையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,092,750 தொகையும் விவசாயிகளுக்கு சோள விதைகளை கடன் அடிப்படையில் வழங்கியமையால் அறவிடப்பட வேண்டிய ரூபா 207,848 தொகையும் அறவிடப்படாதிருந்ததுடன், உலர விடுவதற்காக வழங்கப்பட்டிருந்த சோளத்தினை மீள வழங்காமையால் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 11,194,220 தொகையினை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அத் தொகையினை அறவிடுவதற்கு முடியாது போயிருந்தது.

(ஆ) மலைநாட்டுப் பிரதேச மக்களுக்கு வெள்ள நிவாரணமாக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,135,000 தொகை ரொசிதா பன்னையிலிருந்து அறவிடப்பட வேண்டியதாக

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், பணிப்பாளர் சபை கூட்டக் குறிப்புக்களின் படி, அத்தொகை கால்நடை வளங்கள் மற்றும் கிராமியச் சமூக அபிவிருத்தி அமைச்சிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) தலைமை அலுவலகம் மற்றும் 17 பன்னைகளிற்குரிய 4 வருடங்களிற்கும் மேல் பழமைவாய்ந்த முறையே ரூபா 10,128,117 மற்றும் ரூபா 3,016,255 தொகையான கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கால்நடை வளங்கள் மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்ற மகாவலி பண்ணை விலங்கு அபிவிருத்திக் கம்பனியின் தலைமை அலுவலகத்திற்கும் 02 பன்னைகளிற்கும் கிடைக்க வேண்டிய ரூபா 6,261,979 தொகை 4 வருடங்களிற்கும் மேற்பட்ட காலமாக மாற்றமின்றிக் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டிலும் ரூபா 3,188,202 பெறுமதியான கோழிக் குஞ்சுகள் கடன் அடிப்படையில் அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தன.

(உ) 08 பன்னைகளில் 05 ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாதுள்ள பதவியணியினர் கடன் மீதிகள் ரூபா 319,517 ஆக காணப்பட்டதுடன் ஒரு ஆண்டிற்கும் மேல் பழமைவாய்ந்த விழா/விசேட முற்பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 203,825 ஆகும்.

(ஊ) காசுக் குறைவொன்றாக ரூபா 53,363 தொகை பாற் செயற்திட்டத்தின் கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும், அதற்கான காரணங்களோ அல்லது அதற்குப் பொறுப்புடைய தரப்பினர்களோ இனங்கண்டு கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) வங்கியிடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களின் படி, குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களை கணக்கீடு செய்கையில் குறுங்காலப் பொறுப்புக்கள், நீண்டகாலப் பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்கள் என்பன முறையே ரூபா 29,574, ரூபா 7,355,663 மற்றும் ரூபா 7,385,237 என அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் இந்த வேறுபாட்டிற்கான காரணங்கள் கண்டறியப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு** | **இணக்கமின்மை** |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை<br>நிதிப்பிரமாணம் 371(2) | பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் குறித்த பணி நிறைவேற்றப்பட்டவுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், சபையின் உத்தியோகத்தர்களிற்கும் பல்வேறு நிறுவனங்களிற்கும் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,398,229 தொகையான முற்பணங்கள் 2014 திசெம்பர் 24 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2011 செப்தெம்பர் 15 ஆந் திகதிய பீஈடீ/58(2) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | திறைசேரியின் அங்கீகாரமின்றி தலைவருக்கு 2013 சனவரி முதல் நவம்பர் வரை வதிவிட வாடகை படி ரூபா 330,000 செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய கொள்வனவு வழிகாட்டல்கள் கோவை 2.14 ஆம் வழிகாட்டல் | நிகவெரடிய பன்னையின் புதிய விற்பனை நிலையத்தினை நிர்மாணிப்பதற்கான மதிப்பீட்டுப் பெறுமதியின் படி அதற்காக அமைச்சின் கனிஷ்ட கொள்வனவுச் சபையின் அங்கீகாரத்தனை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது இந்நிர்மாணப் பணிகளை பகுதிகளாகப் பிரித்து பிராந்திய கனிஷ்ட கொள்வனவுச் சபையின் பரிந்துரையின் மீது நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

## 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

தலைமை அலுவலகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது 08 பண்ணைகளால் மதிப்பிடப்பட்ட தொகையான ரூபா 140,912,713 இனை விஞ்சி ரூபா 73,240,622 தொகை பல்வேறு பணிகளிற்காக செலவிடப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,096,836 மிகையொன்றானதுடன் முன்னைய ஆண்டிற்கான நேரொத்த மிகை ரூபா 26,294,245 உடன் ஒப்பிடுகையில், நிதி விளைவுகளில் ரூபா 24,197,409 வீழ்ச்சியைக் காட்டுகின்றது. நிர்வாகச் செலவினம் ரூபா 42,452,480 ஆல் அதிகரித்திருந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 சபையால் ஆரம்பிக்கப்பட்டிருந்த சட்டரீதியான சம்பவங்கள்

உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவை மேற்கொள்ளத் தவறியமைக்காக இரண்டு வெளிவாரி நிறுவனங்களுக்கு எதிராக ரூபா 14,040,395 இழப்பீட்டினைக் கோரி சபையால் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நீதிமன்றங்களில் இரண்டு வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன், இரண்டு வெளிவாரி நபர்களாலும் சபையின் 10 ஊழியர்களினாலும் பதவி நீக்கம் செய்யப்பட்டமைக்கு எதிராகவும் வழங்கப்பட்டுள்ள நீதிமன்ற தீர்ப்புக்களிற்கு எதிராகவும் 12 வழக்குகள் 2001 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பால் விநியோக செயற்திட்டத்தின் கீழ் பாலை விற்பனை செய்வதற்காக தலைமை அலுவலகத்தினால் 116 விற்பனை நிலையங்கள் நடாத்தி வரப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரை தொழிற்படும் நிலையில் காணப்பட்ட விற்பளை நிலையங்களின் எண்ணிக்கை 50 மாத்திரமேயாகும். அவற்றில் 16 விற்பனை நிலையங்கள் ரூபா 1,775,671 நட்டத்தினையும் 34 விற்பனை நிலையங்கள் ரூபா 17,685,720 நட்டத்தினையும் அறிவித்திருந்தன.

(ஆ) சபைக்குச் சொந்தமான 15 பண்ணைகளிலிருந்து ஆண்டின் போது ரூபா 160,334,263 தேறிய நட்டமொன்று பெறப்பட்டிருந்ததுடன், அவற்றில் 12 பண்ணைகள் 2008 ஆம்

ஆண்டு முதல் நட்டமீட்டி வந்திருந்தன. இருப்பினும், அந்த பண்ணைகளை இலாமீட்டும் நிலைக்கு மாற்றுவதற்கு சபை தவறியிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான மொத்தம் 111 பட்டய விற்பனை நிலையங்களில் 17 விற்பனை நிலையங்கள் மாத்திரம் செயற்படும் நிலையில் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டில் பட்டய விற்பனை நிலைய செயற்திட்டத்தின் தேறிய நட்டம் ரூபா 1,049,282 ஆகும்.

**4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மற்றும் காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு உரித்துடைய முறையே 2,887.7 ஹெக்டயார் மற்றும் 9,728.6 ஹெக்டயார் காணியினை சட்டபூர்வமாக கையேற்காது சபையினால் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அக்காணி சபையின் சொத்தாக 2011 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வெலாட் செயற்திட்டம் என்ற பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,682,727,540 (யூ.எஸ்.டொலர் 12,944,058) கடன் தொகையினை திருப்பிச் செலுத்துவதற்கான திட்டமொன்றைத் தயாரித்துக்கொள்வதற்கு சபை தவறியிருந்ததுடன், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2012 நவம்பர் 06 ஆந் திகதிய DE/AUS/06 ஆம் இலக்க கடிதத்தின் படி 2013 மார்ச் 08 ஆந் திகதிக்கு முன்னர் அல்லது அத்திகதியிலிருந்து கடனை திருப்பிச் செலுத்துதல் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட எவ்விதத் தொகையும் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 விளைவற்ற சொத்துக்கள்**

செயற்படுத்தப்படாத கந்தளாய் சோளப் பயிர்ச் செய்கை செயற்திட்டத்திற்கு உரித்தான 03 வங்கிக் கணக்குகள் 2010 ஆம் ஆண்டு முதல் செயலிழந்து காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு மீதி ரூபா 885,470 ஆகும்.

**4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

சபைக்குச் சொந்தமான 30 பன்னைகளில் காணப்படுகின்ற பிராணிகளின் பிறப்பு மற்றும் இறப்பு தொடர்பான தகவல்கள் இரண்டு சந்தர்ப்பங்களில் சபையின் தலைவரிடம் கோரப்பட்டிருந்த போதிலும், 25 பன்னைகளின் தகவல்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. அந்த 25 பன்னைகளில் ரூபா 12,675,820 பெறுமதியான பசுக்களும் 1,071 எருமை மாடுகளும் இறந்திருந்தன.

**4.5 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

கந்தளாய் சீனிக் கம்பனிக்குச் சொந்தமான கரும்புப் பயிர்ச்செய்கை நிலத்தில் ஏறத்தாழ 1,000 ஏக்கர்கள் பரீட்சார்த்த செயற்திட்டமாக சோளத்தினை பயிரிடுவதற்காக சபைக்குத் தற்காலிகமாக வழங்குவதற்கும் அதற்காக சுழற்சி நிதியமொன்றை உருவாக்குவதற்கும் காணியில் கரும்புப் பயிர்ச்செய்கைக்காக பொருத்தமான முயற்சியாளர் ஒருவர் தெரிவுசெய்யப்படின் சுழற்சி நிதியத்தில் எஞ்சியுள்ள தொகை பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கும் உட்பட்டு 2007 யூன் 28 ஆந் திகதி அமைச்சரவையினால் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. சுழற்சி நிதியத்திற்காக ரூபா 37.5 மில்லியன் தொகை கிழக்கின் வசந்தத்தின் கீழ் சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், இச் செயற்திட்டம் தோல்வியடைந்தமையால் காணி 2011 செப்தெம்பர் 01 ஆந் திகதி கம்பனிக்கு மீள ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், சுழற்சி நிதியத்தில் அத் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 17,549,341 தொகையினை திறைசேரிக்குச் செலுத்தாது 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரைக்கும் சபையினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**4.6 ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்**

நிகவெரடிய பன்னையின் விற்பனை நிலையம் ரூபா 9,078,084 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒப்பந்தத்திற்குரிய கொள்வனவுச் சபையின் தீர்மானம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 2006 சனவரி 25 ஆந் திகதிய கொள்வனவு வழிகாட்டல்கள் 8.9 இன் பிரகாரம் நிர்மாணித்தலுக்காக ஒப்பந்தக் காரருடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருக்கவில்லை. அத்துடன், இது தொடர்பான கொடுப்பனவுகள் பொறியியலாளர் ஒருவரினால் உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

(ஆ) நிர்மாணத்தின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 6,064,321 ஆக காணப்பட்ட போதிலும், ரூபா 3,013,763 தொகைக்கான மேலதிக வேலைகளுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) வழிகாட்டல் 5.4.4 இன் பிரகாரம் பிணையொன்றை சமர்ப்பித்த பின்னர் ஒப்பந்தத் தொகையில் 20 சதவீத உச்ச எல்லை வரை வேலை ஆரம்பித்தல் முற்பணமாக செலுத்தப்பட முடியுமான போதிலும், அந்த எல்லையினை மீறி ரூபா 6,319,000 அதாவது 87 சதவீதம் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது.

**4.4 பதவியணி நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கோப்பு 602 ஆக காணப்பட்டதுடன் உள்ளபடியான ஊழியர் கோப்பு 486 ஆக காணப்பட்டது. செயற்பாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சிரேஷ்ட மற்றும் இரண்டாம் மட்ட பதவிகளின் வெற்றிடங்கள் முறையே 20 மற்றும் 52 பதவிகளும் மூன்றாம் மட்டத்தின் 44 பதவிகளும் நிரப்பப்படாது காணப்பட்டன.

(அ) ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் படி உதவி முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு) பதவிக்குரிய தகைமையினை பூரணப்படுத்தாதிருந்த 60 வயதிக்கு மேற்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு) ஆகவும் 60 வயதுக்கு மேற்பட்ட இரண்டு உத்தியோகத்தர்கள் சபையின் ஆலோசகர்களாகவும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 760,750 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி சபையினால் நியமிக்கப்பட்டிருந்த பிரச்சினைகளைத் தீர்க்கும் குழுவின் பரிந்துரையின் படி 2011 நவம்பர் 01 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் 36 உத்தியோகத்தர்களுக்கு புதிய சம்பள திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த 16 பண்ணைகளின் 76 செயற்பாடுகளுக்கான இலக்குகளிற்கும் வருடாந்த செயன்முன்னேற்ற அறிக்கையில் காட்டப்பட்டிருந்த அந்த இலக்குகளிற்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

அதன் காரணமாக வருடாந்த செயலாற்றலை செயற்பாட்டுத் திட்டத்தின் படி பரிசோதிப்பதற்கு சிக்கல் காணப்பட்டதுடன், பரிசோதிக்கப்பட்ட தகவல்களின் படி 14 பண்ணைகளின் 54 செயற்பாடுகளுக்கான செயலாற்றல் இலக்கிடப்பட்ட பெறுமதியில் 50 சதவீதத்திற்கும் குறைவான பெறுமதியில் காணப்பட்டன.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 14 பண்ணைகளின் 22 செயற்பாடுகளுக்கான செயன்முன்னேற்ற அறிக்கையில் இலக்கிடப்பட்ட எண்ணிக்கை குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த இலக்குகுள் கூட மீளாய்வாண்டில் அடையப்பட்டிருக்கவில்லை.

**5.2 கொள்வனவுத் திட்டம்**

2013 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த கொள்வனவு திட்டத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் அதற்கிணங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கில்லை.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட தரவுகளிற்கும் உள்ளபடியான தரவுகளிற்குமிடையே 08 சதவீதம் முதல் 561 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டதுடன், 2013 ஆம் ஆண்டின் பாதீட்டினால் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்காத 34 செலவின விடயங்களிற்காக ரூபா 66,394,469 செலவு தலைமை அலுவலகத்தினாலும் செயற்திட்டங்களினாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் படி பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.4 தீர்வு காணப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரிதீயகம பண்ணையின் 150 ஏக்கர்கள் 2001 ஆம் ஆண்டில் 98 நபர்களால் அனுமதியின்றி பயிர்ச்செய்கை நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டிருந்ததுடன் அவர்களை பண்ணையிலிருந்து அகற்றுவதற்கு சபை தவறியிருந்தது.

(ஆ) 1992 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த வட்டியற்ற கடன் ரூபா 50,000,000 தொகை மீளாய்வாண்டிலேனும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) ஒப்பந்த நிர்வாகம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) செயற்பாட்டு முகாமைத்துவம்
(ஊ) நிதி முகாமைத்துவம்
(எ) ஆளணி முகாமைத்துவம்